# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## O.S.No.2/2015

**P**W1 மணிமேகலை நாள் 07.01.2023

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்துக்களின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. கடைகளில் யார் யார் வாடகைக்கு இருக்கிறார்கள். எவ்வளவு வாடகை தருகிறார்கள் என்றும் எனக்கு தெரியாது. கடை நிர்வாகத்தை ஜீனா தான் பார்த்துக்கொள்கிறாரா என்று எனக்கு ஞாபகமில்லை. என் அம்மாவிடம் ஜீனா தானம் பெற்ற சொத்துக்களில் நானும், என்னுடைய மற்ற சகோதர, சகோதரிகளும் சேர்ந்து அவருடைய சுவாதீனத்தை இடஞ்சல் செய்தோம் என்றால் சரியல்ல. அதற்காக அவர் பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S 639/2014 வழக்கு போட்டுள்ளார் என்றால் ஞாபகமில்லை. என் அம்மா உடல் நிலை சரியில்லாமலும், மனநிலை சரியில்லாமலும் இருந்தார் என்பதற்கு நான் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் அம்மா உயிருடன் இருக்கும்வரையிலும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கை இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு சேர்த்து நடத்தப்படுகிறது என்றால் சரிதான். தாவா 4 வது அயிட்ட சொத்தை ஜீனா 30 ஆண்டுகளுக்கு முன்பாக சுவாதீனம் எடுத்து அதை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு அந்த சொத்தில் அனுபவ பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி என் அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது சொத்துக்களை எழுதி வாங்கிக்கொண்டார் என்பதற்கு நான் பதிவுத்துறையில் புகார் கொடுக்கவில்லை. தாவா 1, 4, 5 அயிட்ட சொத்துக்களிலும் 2 வது அயிட்ட சொத்தில் 40 க்கு 40 அளவுள்ள தங்கராஜ், மனோகரனுக்கு விற்ற மனைகள் மற்றும் 2 ஆம் பிரதிவாதிக்கு 01.06.2010 இல் தானமாக கொடுத்த சொத்துக்களில் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் பாகமும் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. இது தவிர மற்ற சொத்துக்களில் எனக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும், மற்றவர்களுக்கும் பங்கு உள்ளது என்றால் எல்லா சொத்துக்களிலும் பங்கு உள்ளது. என் சகோதரரின் தூண்டுதலின் பேரில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தனக்கு அனுபவத்தில் உள்ள சொத்துக்களிலும் 01.06.2010 இல் தானமாக கிடைத்த சொத்துக்களிலும் 2 ஆம் பிரதிவாதி உரிமையாளராக அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. O.S 639/2014 (30/2022) வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.